# ஓஎன்ஜிசி பொதுப்பள்ளி

## நிரவி-காரைக்கால்-609604

வகுப்பு : ஐந்தாம் நிலை (அ/ஆ/இ/ஈ)

---

பாடம் : தமிழ்- இரண்டாம் மொழிப்பாடம் **பயிற்சித்தாள்** (2022 – 2023)

1. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். நம் தாய்மொழியாம் தமிழ் காலத்தால் முந்தையது மட்டுமன்று; உலகின் முதன்மொழியும் ஆகும். வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை நம் தமிழ்மொழிக்கே உண்டு. தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்துபிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உயரிய தத்துவத்தை உலகுக்கு உணர்த்தியது, நம் தமிழ்ப்பண்பாடு. உலகமே வியந்து பார்க்கும் வளமான சொற்கள் உடையது நம் அன்னைத் தமிழ்மொழி.

1. தமிழ் என்னும் சொல்லின் பொருள் யாது?
2. உறவினர் என்னும் பொருள் தரும் சொல்லை பத்தியிலிருந்து எடுத்தெழுதுக.
3. தமிழ்மொழியில் என்னென்ன இலக்கணப் பிரிவுகள் உள்ளன?
4. தமிழ்ப் பண்பாடு உலகுக்கு உணர்த்திய உயரிய தத்துவம் யாது?
5. பிரித்து எழுதுக. தமிழிலக்கணம் – ------------ + ------------.

2. ஆங்கிலச் சொற்களை நீக்கி எழுதுக.

எ.கா.

1. ஹேண்ட்ரைட்டிங் காம்பிடிசன்ல எனக்குப் ஃபர்ஸ்ட் பிரைஸ் கிடைத்தது.
   <u>கையெழுத்துப் போட்டியில் எனக்கு முதற்பரிசு கிடைத்தது.</u>
2. ஃபஸ்ட் பீரியட் தமிழ் கிளாஸ் நடந்தது
   ______________________________________________
3. நான் ட்ராயிங் நோட்டில் உள்ள பிச்சர்க்கு கலர் கொடுத்தேன்
   ______________________________________________

3. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. முன்னேற்றம்
2. புதுமை

4. பொருத்தமான சொல்லைக் கொண்டு பழமொழியை நிறைவு செய்க.

புத்தி, அடி, காலை, பயிர், வளையாதது

1. யானைக்கும் __________________ சறுக்கும்
2. விளையும் __________________ முளையிலே தெரியும்
3. ஐந்தில் __________________ ஐம்பதில் வளையாது
4. ஆத்திரக்காரனுக்குப் __________________ மட்டு
5. ஆழம் தெரியாமல் __________________ விடாதே

5. எதிர்ச்சொல்லைக் கண்டறிந்து எழுதுக.

